1971 ஏப்ரல் 2] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

திருமதி டி. என். அனந்தநாயகி அவர்களுடைய திருத்தத் தீர்மானமும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி "ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பட வேண்டும் :—

1971-ம் ஆண்டு, மார்ச்சு திங்கள் 24-ம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்ற கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்குவிடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பேரவையின் 6(1)-வது விதிக்கிணங்க, கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் முதல் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairman) நான் நியமிக்கின்றேன்.

திரு. மா.வெ. கரிவேங்கடம்,

திருமதி ஜோதி வெங்கடாசலம்,

திரு. நா. விராசாமி,

திரு. நீ. அன்புச்செழியன்,

திரு. என். கே. பழனிசாமி,

திரு. எம். எ. லத்தீப்.

(இ) நூல்நிலையக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அரசினர் நூல் நிலையக் குழு தேர்தலுக்காக திரு. ஏ. ஆர். சுப்பையா அவர்களின் பெயர் நியமனம் செய்யப் பட்டுள்ளது. நிரப்பப்பட வேண்டிய ஒரு வெற்றிடத்திற்கு மேற்படி நியமனம் முறைப்படி செய்யப்பட்டுள்ளதால், திரு. ஏ. ஆர். சுப்பையா அவர்கள் அரசினர் நூல் நிலையக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

(ஈ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1971-72-ஆம் ஆண்டுக்கான அவையுரிமைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டப்பேரவையின் பதினைந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட பதினைந்து உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. ஆர். பொன்னப்ப நாடார்,

2. திரு. ஜி. ராஜாராம்,

3. திரு. டி. கணபதி,

4. திரு. என். கணபதி,

5. திரு. ஈ. எம். நடராசன்,

6. திரு. க. பழனிவேலன்,

7. திரு. சொ. காவேரிமணியம்,

8. திரு. நா. வீராசாமி,

9. திரு. க. சுப்பு,

10. திரு. என். வி. குருசாமி,

11. திரு. ஏ. சுப்பிரமணியம்,

12. திரு. ஏ. ஆர். பெருமாள்,

13. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்,

14. திரு. கே. எம். சுப்பிரமணியம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1971-72 ஆம் ஆண்டு அவையுரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டதாக நான் அறிவிக்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழு வின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 183 (4) விதியின் கீழ் பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(உ) அவையினர் குழுவிற்கு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1971-72 ஆம் ஆண்டுக்கான அவையினர் குழுவிற்குச் சட்டப் பேரவையின் பதிமூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக் கும்பொருட்டு கீழ்க்கண்ட பதிமூன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள் :

1. திரு. கு. ஆ. பொம்மன்,
2. திரு. கே. என். குமாரசாமி,
3. திரு. வி. தவமணித் தேவர்.
4. திரு. எஸ். முஹம்மது காதர் முகைதீன்,
5. திரு. நீ. அன்புச்செழியன்,
6. திரு. மா. வெ. கரிவேங்கடம்,
7. திரு. ந. சோமசுந்தரம்,
8. திரு. அ. சே. குமாரசாமி,
9. திரு. செ. கந்தப்பன்,